பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 19 (3—1—68) புதன் ★ வெளியூர்: மார்கழி 20 (4—1—68) வியாழன் [இதழ்: 168

காங்கிரசு ஆளும் மாநிலத்தில்.....

மற்றொரு மாவட்டத்தில் மதுவிலக்குக்குச் சீட்டு!

பெல்லாரி, சன. 3—

பெல்லாரி மாவட்டத்தில் (மைசூர்) கடந்த 20 ஆண்டுகளாக செயலில் இருந்துவந்த மதுவிலக்கு நேற்றுமுதல் முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுவிட்டது.

மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் மதுக் கடைகள் திறக்கப் பட்டன.

தமிழகத்தின் வரலாறு திரும்புகிறது!

அன்றைய பாண்டியன் ஏற்ற பழியை இன்று நாம் துடைத்துவிட்டோம்!

'உலகிற்கே வழிகாட்டிய வள்ளுவரால் நம்மை உலகம் அறிந்தது'-- சான்றோர்கள் சிலைத் திறப்பு விழாவில் ஆன்றோர்களின் உரை

தீந்தமிழ் வளர்த்த தமிழகத்துச் சான்றோர் — அயல்நாட்டு ஆன்றோர் பதின்மருக்குத் திருவுருவச் சிலையெடுத்துச் சிறப்பித்துப் புதுச் சரித்திரம் படைத்த திறப்புவிழாவில் ஆன்றோர் பலரும் ஆற்றிய உரை வருமாறு:—

இரா. நெடுஞ்செழியன்

சில புலவர்கள் சிலருக்காகவே பாடினார்கள்; சிலர் சில நேரத்துக்கு மட்டுமே பாடினர்; வேறு சிலர் சில இடங்களுக்காக மட்டுமே பாடினர். சிலர் அரசர்களுக்காகவே பாடினர்; சிலர் ஜமீன்களுக்காகவே பாடினர்; ஜமீன்தார் குதிரை மீது ஏறிச் சவாரி செய்த போது, அவர் சவுக்கை ஓங்கி அடிக்கும்போது எழும் ஓசையைக் கேட்டுச் சிட்டுக்குருவிகள் பறந்தோடியதையும் வர்ணித்து ஒரு புலவர் பாடியிருப்பார். இன்னும் இதைப் போன்ற பாடல்களைப் பாடியவர்கள் பலர் உண்டு; ஆனால் திருவள்ளுவர், குறிப்பிட்ட சிலருக்காக—குறிப்பிட்ட காலத்துக்காக—குறிப்பிட்ட காரியத்துக்காகப் பாடவில்லை; உலகத்துக்கே பாடினார். எல்லாக் காலத்திற்கும்—எல்லா இடத்திற்கும்—எல்லாப் பருவத்தினருக்கும்—எல்லா நாட்டுக்கும்—எல்லா ஆட்சிக்கும்—எல்லாக் கட்சிக்கும்—எல்லாத் துறையினருக்கும்—எல்லா வகையினருக்கும் பயன்படுமாறு தமது திருக்குறளை இயற்றினார்; அதனால்தான், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடிப் புகழ்ந்தார் பாரதியார்!

அப்படிப்பட்ட வள்ளுவருக்கு அவர் பிறந்த இடமாகக் கூறப்படும் சென்னையிலேயே சிலை அமைப்பது சாலப்பொருத்தமுடையதாகும்.

அவருடைய உருவத்தை யாரும் கண்டதில்லை; தாம் எழுதிய குறளைத்தான் அவர் நமக்குக் காட்டிச்சென்றிருக்கிறார்; எனவே, 'இப்படித்தான் இருந்திருக்கக்கூடும்' என்று கற்பனை செய்து ஓர் உருவத்தை வடித்திருக்கிறார்கள்; இந்தத் திருஉருவத்தைத் திறந்து வைப்பதிலே பெருமையடைகிறேன்.

இந்த விழாவின் மூலம் தமிழின் பெருமையும், தமிழனின் பெருமையும் உலகெலாம் பரவட்டும்! 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்ற புரட்சிக் கவிஞரின் பாடலை முழங்கி விடை பெறுகிறேன்."

கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ் தோன்றிய காலந்தொட்டு நடந்திராத விழா, இன்று இங்கே நடக்கின்றது; தமிழ் வளர்க்கும் ஒரு தமிழ் அரசு அமைந்த பிறகு இது நடைபெறுகிறது.

இதேபோல், இனி ஆண்டுதோறும் தமிழகத்தில் விழாக் கொண்டாட வேண்டும் என்று பலரும் விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களின் விருப்பம் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

வள்ளுவர் சிலையைத் திறப்பதன் மூலம் உங்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் வள்ளுவரின் உருவத்தைத் திறந்து வைப்பதாகும். வள்ளுவர் இந்த நாட்டின் தமிழ் மகன்—தமிழ்ப் பேரறிஞன்—பெரும் புலவன்—பேராசிரியன்.

தமிழ் நாட்டில் பிறந்து 42 ஆண்டுகளே வாழ்ந்த வள்ளுவர், ஒன்றே செய்தார்—நன்றே செய்தார்—அதையும் அன்றே செய்தார்!

மனிதன் விண்ணிலே விமான மூலம் பறக்கக் கற்றுக்கொண்டான்; தண்ணீரிலே நீந்தக் கற்றுக்கொண்டான்; ஆனால், தரையிலே எப்படி மனிதனாக நடக்கவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளவில்லை! அதனைத்தான் வள்ளுவர் கற்றுக் கொடுத்திருக்கிறார்!

உலகிலேயே 500 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் பைபிள்; 200 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குரான்; 82 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள்.

இந்த மூன்று நூல்களில், முன்னவை இரண்டும் 'மத நூல்' என்ற முறையில் ஒதுக்கப்படுமாயின், உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இலக்கிய நூல் திருக்குறளேயாகும்.

வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று தவம் கிடந்தால் 'முக்தி' கிடைக்கும் என்று சாற்றும் நூல்கள் நிரம்ப உண்டு; ஆனால் திருக்குறளோ, வீட்டிலேயே இருந்து வாழ வழி காட்டும் நூலாகும்.

'இதைப் படித்தாலே மோட்சம் கிட்டும்' என்று ஆசைகாட்டும் நூல்களும், 'இன்னதைச் செய்தால் நரகம் கிட்டும்' என்று அச்சமூட்டும் நூல்களும் உண்டு; ஆனால் திருக்குறளோ, ஆசை காட்டவுமில்லை -- அச்சமூட்டவுமில்லை! 'நல்லது இது--கெட்டது இது; செயத்தக்கது இது -- செயத்தகாதது இது' என்று மட்டுமே சொல்லக்கூடியது!

"அறம் வளர்ந்து பொருளை நாடி, இன்பத்தை அடைய வழிகாட்டுவது; இந்த மூன்றுக்கும் பிறகு 'வீடு' என்பது உண்டானால், அது உன்னை நாடிவரும்" என்று உரைப்பது தான் திருக்குறள்!

திருவள்ளுவர் மட்டும் தோன்றியிராவிட்டால், 'தமிழ்' என்ற ஒரு மொழியை—தமிழ் இனத்தை — தமிழ்நாட்டை உலகம் அறிந்திருக்க முடியாது! நம்மை உலகிற்கு எடுத்துக்காட்டியவர் வள்ளுவர்!

மு. கருணாநிதி

"கற்பின் நிலைக்களமாய்—பெண்ணின் இலக்கணமாய்—வீரத்தின் திருவுருவாய் சிலப்பதிகாரக் காவியத் தலைவியாய்க் கண்ணகியை வைத்துப் பாடியிருக்கிறார் இளங்கோவடிகள்!

பொற்புடைய மங்கையாம் கண்ணகிக்குச் சிலையெடுக்கும் பொன்னாளாகும் இந்த நாள்.

தன் கணவன் கோவலனுக்கு, 'நீதி தவறி தவறிழைத்து விட்டான் பாண்டியன் நெடுஞ்செழியன்—அவசரத்தில் பாண்டியன் தீர்ப்பளித்ததால் கணவன் கொலையுண்டான்' என்பதறிந்து வெகுண்டெழுந்து, ஒற்றைச் சிலம்புடன் பாண்டியனின் அவைக் களத்துக்குச் சென்று வழக்குரைத்து நீதியை நிலைநாட்டினாள்; தாம் செய்த தவறுக்குத்

(4-ம் பக்கம் பார்க்க)

வஞ்சி விழாவும் சென்னை விழாவும்

"சேரன் — செங்குட்டுவன், கண்ணகிக்குச் சிலையெடுத்து விழா நடத்தியபோது, சிறையிலிருந்த கைதிகளுக்கெல்லாம் விடுதலையளித்ததாக வரலாறு கூறுகிறது.

"இன்றும் கண்ணகிக்குச் சிலையெடுக்கும் இந்த விழாவையொட்டி (உலகத் தமிழ் மாநாட்டையொட்டி) கைதிகளிக்குத் தண்டனைக் குறைப்பு வழங்கியுள்ளது தமிழக அரசு! சேரனைப்போல் விடுதலையளிக்க முடியாது; ஏனெனில் இங்கு எதிர்க்கட்சி இருக்கிறது; அதனால்தான் விடுதலையளிக்காமல் தண்டனை மட்டும் குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே தமிழக அரசைப் பாராட்டி வாழ்த்துகிறேன்."

--ம. பொ. சிவஞானம்

தமிழ் வளர்த்த சான்றோர்க்கு சிலையெடுத்தது தமிழகம்!

தலைநகரின் கடற்கரையில் பதின்மரின் திருவுருவங்கள்!

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்--வரலாற்றில் பதித்திட்ட புதிய கட்டம்

சென்னை, சன. 2—

உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, தமிழ் வளர்த்த சான்றோர்--ஆன்றோர் பதின்மரின் திருவுருவச் சிலைத் திறப்புவிழா, இன்று மாலை சென்னைக் கடற்கரையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காந்தி சிலையருகே கடல் மணற்பரப்பில் இலட்சோபலட்சம் தமிழ் மக்கள் வெள்ளமெனத் திரண்டிருக்க--எழில்மிகு நீண்ட மேடையில் விழாத் தலைவர்களும், சிலைத் திறப்பாளர்களும் வரிசையாக அமர்ந்திருக்க--விழாத் துவங்கியது.

சீர்காழி கோவிந்தராசனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் துவக்கமாயின.

உலகத் தமிழ் மாநாட்டு அமைப்புச் செயலாளர் திரு. மு. ரா. பெருமாள்(முதலியார்) வரவேற்புரையாற்றினார்.

மேடையருகே வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருந்த பத்து உருவச் சிலைகளின் புகைப் படங்களும், ஒன்றன்பின் ஒன்றாகத் திறந்துவைக்கப்பட்டன

ஒவ்வொரு படமும் திறக்கப்பட்டவுடன், மேடையிலிருந்து தொலைபேசி மூலம் அந்தந்தச் சிலை இருக்குமிடத்துக்குச் செய்தி சொல்ல—அங்கிருந்த ஒருவர் சிலையின்மீது போர்த்தியிருந்த வண்ணப் பட்டுச் சிலையை விலக்கிவிட்டதும், உருவச் சிலைகள் மலர் மாலை அணிந்தவாறு காட்சியளித்தன.

விழாவுக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் குடும்பத்துடன் வந்து, இறுதிவரையில் அமர்ந்திருந்து விழா நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்கள்.

தமிழ்நாட்டு மக்களுடன் வெளிநாட்டுத் தமிழன்பர்களும் விழாவில் பங்குகொண்டனர்.

முதலில், கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில்—திருவள்ளுவர் சிலையை முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் திறந்து வைத்தார்; இந்த உருவச் சிலை, சிவாஜி கணேசன் அவர்களால் வழங்கப்பட்டது.

அடுத்து, ஔவைப் பெருமாட்டியின் திருவுருவச் சிலையை, செய்தித் துறையமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில்—'ஆனந்த விகடன்' ஆசிரியர் திரு. எஸ். எஸ். வாசன் திறந்து வைத்தார்; இந்தச் சிலை, சென்னை மாநகராட்சியினால் வழங்கப்பட்டது.

பின்னர், கவியரசர் [illegible] சிலையை வேளாண்மைத் [illegible] யமைச்சர் திரு. ஏ. கோவிந்த[illegible] அவர்கள் தலைமையில்—முன்னாள் முதலமைச்சர் திரு. மீ. பக்தவத்சலம் அவர்களால் திறக்கப்பட்டது; இந்தச் சிலையை வழங்கியவர்கள், கோவை மாவட்ட[illegible] பொதுமக்கள் ஆவர்.

அடுத்து, ஜி. யு. போப் உருவச் சிலை, சட்டப் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனு[illegible]

(4 ம் பக்கம் பார்க்க)

வரலாறு திரும்புகிறது!

"வஞ்சிமூதூரில் சேரன் - செங்குட்டுவன், கண்ணகிக்குச் சிலையெடுத்த அந்த விழாவிற்கு இலங்கையிலிருந்து கயவாகு மன்னன்வந்திருந்தான்; இன்று நடைபெறும் கண்ணகிச் சிலைத் திறப்பு விழாவிற்கு அதே இலங்கையிலிருந்து அமைச்சர் திருச்செல்வம் வந்திருக்கிறார்; 'வரலாறு திரும்புகிறது' என்பதைத்தான் இது காட்டுகிறது!"

--அமைச்சர் கருணாநிதி

ஆபிரகாம் லிங்கனைப்போல் உயர்ந்தவர் அண்ணா

தமிழகத்திற்கு மட்டுமன்றி தென்னகத்துக்கே புகழ் சேர்த்திருக்கிறார்!

சிலைத் திறப்பு விழாவில் ஆற்காட்டு இராமசாமி புகழுரை

சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலையைத் திறந்து வைத்த டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள், அண்ணாவின் வாழ்க்கையை ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையுடன் ஒப்பிட்டுக் கூறினார்; 'அறிஞர் அண்ணாவின் அறிவாற்றல், தென் மாநிலங்களனைத்துக்குமே பெருமை சேர்த்திருக்கிறது' என்றார் அவர். தமது உரையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"எனது வாழ்நாளிலேயே மிகவும் மகிச்சி தரத்தக்க ஒரு நிகழ்ச்சியை இதுபோது நடத்தி வைக்கிறேன்.

மக்களுக்காக வாதாடுகின்ற மக்கள் தொண்டன்—இம்மாநிலத்தையும், இதனை அடுத்துள்ள (தென்னக) மாநிலங்களிலும் பிறர் கண்டு மதிக்கும்படி அவற்றைத் தலைநிமிரச் செய்த ஒருவரது சிலையை இப்போது நான் திறந்து வைத்திருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரை நான் நாற்பதாண்டுகளாக அறிவேன். 1927 முதல் அவரது வாழ்க்கையை நான் கவனித்து வருகிறேன்; பல சந்தர்ப்பங்களில் அவரது ஏற்றம் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்; வேறு சில நேரங்களில் அவரது துன்பங்களைக் கண்டு நான் மனவேதனையும் பட்டதுண்டு.

தமிழ்ப் பேச்சாற்றலில் அவர் எல்லோரையும் மீறியவர்; ஆங்கிலத்திலும் அவருக்கிணையானவர் உலகில் இல்லை; நாவன்மை மிக்க பேச்சாளர் அவர்!

நாவன்மை மட்டும் வேறு சிலரிடம் இருக்கக்கூடும்; ஆனால் கருத்தாழத்தோடு கூடிய நாவன்மை காண்பதரிது.

அண்ணாவின் சொற்பொழிவிலெல்லாம் கருத்துக்கள் குவிந்திருக்கும்; இதுவே ஒருவரை மற்ற மனிதர்க்கெல்லாம் தலைவராக்குகிறது!

1934—45-ம் ஆண்டு முதலே சுயமரியாதை இயக்கத்தில் அவர் இருந்தாரென்றாலும், தமிழ் மொழியின் உயர்வுக்கும்—அதன் உரிமைக்கும்—மக்களுக்கான வேறு பலவற்றுக்குமாகப் பாடுபட்டாரென்றாலும், அவரது சொந்த ஊராரே அவரது சிறப்பினை உணராதிருந்தார்! ஆனால் அவரோ, தம் பணியினைத் தொடர்ந்தார்!

இன்று அவர் எல்லா மக்களின் உற்சாகமிக்க நல்லாதரவினையும், உயர் மதிப்பினையும் பெற்றுத் திகழ்கிறார்!

'அண்ணா' என்று அழைக்கப்படுகிற அவர், ஓர் சர்வாதிகாரியல்லர் என்பதால், எல்லோரும் அவரை, 'அண்ணா' என்றழைக்கும்போது, அவர்கள் உள்ளத்திலெல்லாம் இழையோடுவது—பிரிக்க முடியாத சகோதர பாசம்!

அண்ணாவின் பாதை கடுமையானதாக இருந்தது! சோதனை மிக்க நாட்களை அவர் கடந்து வந்தார்!

எல்லாவற்றையும் விட்டுத் தனிமையில் ஒதுங்கிவிட அவர் எண்ணியதுண்டு; ஆனாலும் தம் விடாமுயற்சி காரணமாக இன்றைய உயர்நிலையை அவர் அடைந்துள்ளார்!

ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும்போது, '… குடிலிலிருந்து வெள்ளை …கைக்குச் சென்றார்' என்…; அதுபோல அண்ணா வாழ்க்கையும் அமைந்துள்ளது! ஆனால் இன்னும் அவர், அவரது புகழின் உச்சியை எட்டவில்லை!

தமிழகத்துக்குப் பெருமையும், மதிப்பும் தேடியுள்ள அவர், இதன்மூலம் ஏனைய தென் மாநிலங்களும் மதிப்பைப் பெறச் செய்தார்!

நண்பர் நெடுஞ்செழியனுக்கு நினைவிருக்கும்—அண்ணா அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக … சட்டமன்றத்திலிருந்த போது, தங்களை, 'வெல்லற்கரியவர்கள்' என்று கருதிக்கொண்டு ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்தவர்கள் அவரை எப்படி நடத்தினார்கள் என்பது அவருக்கு நினைவிருக்கும்,

இன்று அதே அண்ணாவும் அவரது தோழர்களும், மத்திய அரசிலே கடவுளர்போல வீற்றிருப்பவர்களுக்கு, வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரித்திடும் வகை என்ன என்பதைச் சொல்லித் தரத்தக்கவர்களாக இருப்பதைக் காண்கிறோம்!

மத்திய அரசை சர்வ வல்லமை உடையதாக ஆக்கிட, 'அரசியல் சட்டத்தையே திருத்திட வேண்டும்' என்று கூறுவோரும், 'குடியரசுத் தலைவர் ஆட்சி முறையைக் கொண்டுவர வேண்டும்' என்று கூறுவோரும் இருக்கக் காண்கிறோம்!

இவர்கள் அடைந்த மோசமான படுதோல்விக்குக் காரணமே, இந்திய அரசியல் சட்டத்தின் கூட்டாட்சித் தன்மையை உணராது இவர்கள் செயல்பட்டதே அல்லவா? இத்தகைய நிலையை எதிர்த்து அந்நாளில் புரட்சி செய்தவர், வங்கத்து முதலமைச்சராக இருந்த பி. சி. ராய் ஒருவரேயாவார்!—'ஜவகர், எதை - எப்போது - எப்படிச் செய்ய வேண்டுமென்பதை நான் அறிவேன்; நீர் தலையிடாதீர்' என்று சொன்னவர் அவர்!

இந்த அரசியல் அமைப்புச் சட்டம் பற்றி இன்னும் சொல்லுவதானால், இது ஒரு தனிக் கட்சி வகுத்துக்கொண்ட அரசியல் சட்டமாகும்!

அரை டசன் தலைவர்கள் இட்ட கட்டளைப்படி 'ஆம்' என்று அவர்கள் கட்சியினர் கூறிட நிறைவேறிய சட்டமாகும் அது! அம்பேத்கார் தவறுதலாக அதனோடு கலந்துவிட நேர்ந்தது!

இன்று அண்ணா அவர்கள் திடமாக நிற்கிறார்—'எங்களுக்குத் தெரியும் என்ன செய்வதென்று' என்று தெளிவாகச் சொல்கிறார்! அவரது கருத்து இதர மாநிலத்தாரிடையே பரவுகிறது.

மொழி குறித்து அண்ணாவும் அவரது அமைச்சரவையினரும் காட்டிவருகின்ற உறுதிக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்! சர்வாதிகாரியாக அல்லாமல், 'அன்பு அண்ணனாக' இருக்கும் முதலமைச்சருக்கு ஆதரவாக அவர் பக்கம் நின்று—அவர் காட்டும் வழியில், தமிழ் மொழியின் புகழுக்கு -- தமிழ்ச் சமுதாயத்தின் புகழுக்கு உழைத்திடுவோம்!

தென்னகம் மட்டுமல்லாது இந்தி பேசாத பிற மாநிலங்கள் அனைத்தின் நலன்கள் சிறக்கவும் உழைத்திடுவோம்!

'தென்னாடு மட்டுமே இந்தியை எதிர்க்கிறது' என்று சொல்லி ஒடுக்கப் பார்ப்பார்கள்—அது நடவாது! வங்காளம், குசராத் போன்ற மாநிலங்களும் இந்தியை எதிர்க்கின்றன!

வங்கத்தின் முன்னாள் அமைச்சரான ஜகாங்கிர் கபீர், அங்கே தி. மு. கழகத்தைப் போன்றே கட்சி அமைக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்; அது எளிதல்ல; கழகத்தைப்போல் கட்சி ஏற்படுத்தப் பல்லாண்டுக் காலம் பாடுபட்டுக் கடுமையாக உழைத்தாக வேண்டும். ஆனாலும், ஜகாங்கிர் கபீர், தன் முயற்சியில் வெற்றிபெறுவாரென்று நம்புகிறேன்.

'சட்ட விரோதச் செயல் தடுப்பு மசோதா' என்று ஒரு சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள்; இது சுதந்தர இயக்கம் தோன்றக் காரணமாக இருந்த ரௌலட் சட்டத்தைவிடக் கொடுமையானது!"

பெரியார் கல்லூரி-- அண்ணா திறந்தார்

அமைச்சர் மு. கருணாநிதி தலைமையில் விழா

திருச்சி, டிச. 31—

கஞ்சமலையில் பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரியை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் இன்று திறந்து வைத்தார்.

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அண்ணா அவர்கள் பேசுகையில், தனது வருவாயில் நான்கில் ஒரு பங்கை கல்விக்காகச் செலவிட்ட போதிலும், முற்போக்கடைந்துள்ள நாடுகளில் அளிக்கப்படும் கல்வி வசதிகளை அளிக்கப் போதவில்லை என்றும், ஆனாலும், இன்றைய மாணவர்களுக்கு 10 ஆண்டுக்கு முந்தைய மாணவர்களைவிட அதிக வசதிகள் கிடைத்துள்ளன என்றும், மாணவர்கள் அவைகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

"நாங்களெல்லோரும் 'பெரியார் கல்லூரி'யில் பயின்றவர்கள் தான்" என்று கூறிய அமைச்சர் கருணாநிதி, 'பெரியார் இப்பொழுது கல்லூரிகளுக்கு நிறைய நன்கொடைகள் வழங்கி வருவது குறித்து மகிழ்கிறோம்' என்றார்.

இவ்விழாவில் பெரியார் அவர்களும் கலந்துகொண்டு பேசினார்; 'திருச்சியில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும்' என்றார் அவர்.

படி அரிசித் திட்டத்துக்கு ரூ. 10 கோடி அதிகச் செலவு

வருவாயில் கால் பங்கு கல்வித் துறைக்கு

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

"படி அரிசித் திட்டத்தை குடும்பக் கார்டு பகுதிகள் அனைத்துக்கும் விரிவுபடுத்துவதென்றால், ஒரு ஆண்டுக்கு ரூ. 10 கோடி அதிகம் செலவாகும்; மாநிலத்தின் மொத்த வருமானம் சுமார் ரூ. 210 கோடி; இதில் கால்பங்கு—அதாவது, ரூ. 54 கோடி—கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது; போலீசுககு ரூ. 10 கோடி போய்விடுகிறது; மருத்துவத்துக்கும், சுகாதாரத்துக்கும் சுமார் ரூ. 15 கோடி; மத்திய அரசிடமிருந்து வாங்கிய கடன் தவணைக்கும், வட்டிக்கும் ரூ. 28 கோடி கொடுக்க வேண்டியிருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், திருச்சியில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் விளக்கினார்கள். அவர் மேலும் கூறியதாவது :—

மத்திய அரசு வரி ஏய்ப்பைத் தடுத்தும். பாதுகாப்புச் செலவைக் குறைத்தும் கூடுதல் வருவாய் தேட முடியும்.

அமெரிக்க வரித் திட்ட நிபுணர் நிக்கலஸ் கால்டார், நேரடி வரி ஏய்ப்பு மூலம் ரூ. 2,000 கோடி வரை இழந்துவருவதாகக் கூறியுள்ளார்.

மத்திய அரசு நிறுவனங்களில் கோடிக்கணக்கில் செய்யப்பட்டுள்ள முதலீட்டுக்குத் தகுந்த இலாபம் கிடைக்க என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை!

விவசாயிகளுக்கான தண்ணீர்த் தீர்வையையும் மின்சாரக் கட்டணத்தையும் உயர்த்துமாறு திட்டக் குழு கூறியது. 'இரண்டு ஆண்டுக்கு இதைப்பற்றிச் சிந்திக்கக்கூட முடியாது' என்று சொல்லிவிட்டேன்.

தமிழகத்தில் 1968—69-ம் ஆண்டுத் திட்டத்துக்கு திட்டக் குழு ரூ. 83 கோடி ஒதுக்கவேண்டும் எனக் கோரப்பட்டது; ஆனால் குழு, ரூ. 43 கோடிதான் ஒதுக்கியிருக்கிறது. தமிழக அரசின் பங்கு ரூ. 22 கோடியையும் சேர்த்து மாநிலத் திட்டம் ரூ. 65 கோடியாக இருக்கும்."

பத்திரப் பதிவுத் துறையினருக்கு அமைச்சர் மாதவன் உறுதிமொழி

ஆட் குறைப்பால் பாதிக்கப்பட்டவர்கட்கு மாற்று வேலை கிடைக்கும்

"நாடு முழுவதற்குமான சமூக—பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டபிறகு தான் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும்"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன், மதுரையில் தமிழகப் பதிவுத் துறை எழுத்தர்கள் சங்கத்தின் மூன்றாவது மாநில மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கூறினார்.

103 ஆண்டுகள் உள்ள இலாகாவின் ஊழியர்களுடைய குறைகளைத் தாம் அறிந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

"வீடு கட்ட என்.ஜி.ஓ.-வினருக்கு, அரசு, ரூ. 30 இலட்சம் கடன் அளித்துள்ளது. ஒருவருக்கு உயர்ந்தபட்சக் கடன் அளவும் உயர்த்தப்பட்டிருக்கிறது" என்றார் அவர்.

'ஆட் குறைப்புச் செய்யப்பட்ட 412-பேரை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்ற வேண்டுகோள் பற்றிக் குறிப்பிடுகையில், புதிய பத்திரப் பதிவு முறை பரீட்சார்த்தமானதே என்றும், அடுத்த ஏப்ரலில் இது பற்றி முடிவு செய்யப்படும் என்றும், பிறகு ஆட்குறைப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மாற்று வேலை கொடுப்பது பரிசீலிக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

அழுது சிவந்த கண்களுடன் தமிழ்ச் சமுதாயம்!

"நம்முடைய மொழியை நாம் கண்போலக் காத்துவருகிறோம்; அந்தக் கண்ணில் சிறு துரும்பு பட்டாலும் எரிச்சல் காணத்தான் செய்யும்; அதனால் உடல்கூட எரிச்சல் காணுவதுபோல் இருக்கும்; அந்த நேரத்தில் யாரேனும் ஏதாவது கேட்டால் எரிந்து விழுவோம்; நம் கண்கள் கோபத்தால் மேலும் சிவந்திருக்கும்; இது, பட்டவர்களுக்குத் தெரியும்!

"கண்ணுக்கு மையிடுவதுபோல் பிறமொழிகளைப் பயன்படுத்த வேண்டும்; மை அதிகமானால் கண்ணை எப்படி அரித்துவிடுகிறதோ அதுபோல், பிறமொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலையை உண்டாக்கும்!

"நம் கண்கள் இப்பொழுது சிவந்திருக்கின்றன; ஆனால், கோபத்தால் சிவந்ததல்ல—அழுது அழுது சிவந்திருக்கின்றன! இதை மத்திய அரசிலுள்ள பெருந் தலைவர்கள் உணருவார்களானால், மொழிப் பிரச்சினை தீர்ந்துவிடும்!"

--அறிஞர் அண்ணா

(தமிழ்த் தொலைபேசி குறிப்பேடு வெளியீட்டு விழாவில்)

மேலக்கரந்தையில் அரிசித் தட்டுப்பாடு

கழகத் தோழர் முயற்சியால் மேலதிகாரி நடவடிக்கை

மேலக்கரந்தை கிராமத்தில் சரியாக ரேஷன் கிடைக்காததால், அந்தக் கிராமப் பொதுமக்களின் வேண்டுகோளின்மீது அவ்வூர் ஊராட்சி உறுப்பினர் கே. கதிரேசனும், தேவராசனும், கோவில்பட்டி நகர தி. மு. க. உறுப்பினர் ஏ. எஸ். வேலுச்சாமி மூலம் தாலுகா விநியோக அதிகாரியைச் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறினர்;

இதன்பேரில் தாலுகா விநியோக அதிகாரி 21—12—67 அன்று மேலக்கரந்தைக்குச் சென்று ரேஷன் கடையைச் சோதனை செய்து, கையிருப்புப் புத்தகம்—விற்பனைப் புத்தகம் ஆகியவைகளையும் கைப்பற்றியதுடன், பொதுமக்களிடமும் இது பற்றி விசாரணை செய்து மேல் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.

இந்தக் கடைக்காரர், ஒரு காங்கிரசுக்காரர் என்று கூறப்படுகிறது.

அதியமான் கோட்டை-- ஔவையார் கல்லூரி!

மதியழகன்-கருணாநிதி வெளியிட்ட நற்செய்தி

சென்னை, சன. 1— தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 'அதமன் கோட்டை' என்ற பெயர், 'அதியமான்கோட்டை' என மாற்றப்படும்.

இந்த நல்ல செய்தியை, உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இன்று வெளியிட்டார்.

'ஔவை—யார்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் மதியழகன் பேசுகையில் இதுபற்றி மேலும் குறிப்பிட்டதாவது :—

"நான் வருவாய்த் துறைக்கும் அமைச்சராக உள்ளபடியால் 'அதமன் கோட்டை' என்ற பெயரை, 'அதியமான் கோட்டை' என மாற்றவேண்டும்—என்று மத்திய அரசுக்கு எழுதி அனுமதி கேட்டிருந்தேன்.

"அதியமான் என்ற பெயர்தான், 'அதமன்' என்று மருவிவிட்டது. மீண்டும், 'அதியமான் கோட்டை' என்று அதன் பெயரை மாற்றியமைக்க முடிவு செய்துவிட்டோம்; மத்திய அரசின் அனுமதியும் கிடைத்துவிட்டது.

"இப்படி ஒவ்வொரு சிறிய காரியத்துக்கும்கூட டெல்லி அரசின் அனுமதியை எதிர்பார்த்திருக்கும் அவலநிலை நமக்கு ஏற்பட்டுள்ளது."

ஔவை கல்லூரி

இதே விழாவில், வெலிங்டன் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியை, 'ஔவையார் கல்லூரி' என மாற்றவேண்டும்—என்று தெரிவிக்கப்பட்ட யோசனையை, முதலமைச்சர் அண்ணாவிடம் சொல்லி ஆவன செய்வதாகப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி பேசுகையில் உறுதியளித்தார்.

உலகத் தமிழ் மாநாட்டில் சோவியத் அறிஞர்கள்

இரஷ்ய --- தமிழ் மொழித் தொடர்பு குறித்து ஆய்வுரை

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கெடுக்கும் இரஷ்யத் தூதுக் குழுவில் ஐந்து இந்திய இயலாளர்கள் உளர்; அவர்களில் இருவரான எம். எஸ். ஆந்திரனேவும், எஸ். ஜி. ருதினும் புகழ்பெற்ற தமிழ் வல்லுநர் ஆவர்.

'திராவிட மொழிகளுக்கும்—யூரல் மொழிகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளின் இயல்பு' என்னும் பொருள் குறித்து எம். எஸ். ஆந்திரனேவ் ஓர் ஆராய்ச்சி உரையை வழங்குவார்.

பண்டைக் காலத்தில், தமிழ் மொழிக்கும்—யூரல் மொழிக்கும் இடையே சில ஒற்றுமைகள் இருந்தன என்ற யூகமும், சொந்த முடிவும் இவ்வுரையில் காணப்படுகின்றன.

தமிழ் இலக்கணப் பிரச்சினைகள் குறித்து எஸ். ஜி. ருதின் உரை வழங்குவார்.

எம். பாப்கினு என்னும் அம்மையார், 'தமிழக மக்கள் கலை—பண்டைய மரபும் இன்றைய மரபும்' என்னும் பொருள் குறித்து ஓர் ஆய்வுரை வழங்குவார்.

இந்தியக் கலை பற்றிய பாப்கினுவின் படைப்புக்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். இந்தியாவின் தேசியக் கலை—அதன் சிறப்புத் தேசிய இயல்புகள் ஆகியவற்றின் வளர்ச்சிப் பிரச்சினைகள் குறித்து முழுமையான ஆராய்ச்சிப் படைப்பு ஒன்றில் அவர் ஈடுபட்டுள்ளார்.

இந்தியத் தேசியக் கலையின் தோற்றுவாய்கள் பற்றியும், அதன் மீது இந்திய மக்களின் தொன்மை மரபின் செல்வாக்கு பற்றியும், இன்றைய இந்தியாவில் அது வளர்ந்து வரும் வழிகள் பற்றியும் அவர் கண்டறிய முனைந்துள்ளார்.

பொருளாதாரம் குறித்தும் இரஷ்யத் தூதுக் குழு ஓர் ஆய்வுரை வழங்கும்.

'தெற்கு, தென் கிழக்கு ஆசியாவின் பொருளாதார வளர்ச்சியில் தமிழர்களின் பங்கு' என்னும் பொருள் குறித்து, புலார்கின் என்பவர் ஓர் உரை வழங்குவார்.

தமிழர்களின் பொருளாதார வாழ்வின் உறுதிப்பாட்டை வரையறுக்கவும், இந்தியாவிலிருந்து தமிழர்கள் குடியேறிய தெற்கு—தென் கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தோடு தமிழர்களின் பொருளாதார வாழ்வு எவ்வாறு பொருந்துகிறது என்று தீர்மானிக்கவும் இவ்வாராய்ச்சி பயன்படும்.

தமிழ் ஆராய்ச்சியின் பல்வேறு துறைகள் குறித்து—மொழி இயல், இலக்கிய ஆராய்ச்சி, கலை ஆராய்ச்சி, பொருளாதாரம் ஆகியவை குறித்து—சோவியத் தூதுக் குழுவின் ஆய்வுரைகள் அமைந்துள்ளன.

நாற்றிசையிலிருந்தும் வந்திடும் நற்றமிழறிஞர்!

உலகத் தமிழ் மாநாட்டுக்கு இரஷ்யா, ருமேனியா, செகோஸ்லாவாகியா முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தமிழறிஞர்கள் வருகிருர்கள்.

அமெரிக்காவிலிருந்து 40 பிரதிநிதிகள் வருகிருர்கள்.

மொத்தத்தில் 35 நாடுகளிலிருந்து 450 பிரதிநிதிகள் வருகிருர்கள்.

இவர்களில் 200 பேர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

மலேசியாவிலிருந்து வரும் தூதுக் குழுவுக்கு, மலேசிய அஞ்சல் துறை அமைச்சர் வி. டி. சம்பந்தம் தலைமைதாங்கி வருவதாக இருந்தார்; வேறு வேலை காரணமாக அவர் வர இயலவில்லை.

மலேசியாவிலிருந்து வருவோரில் முக்கியமானவர்கள், மலாய்ப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை முதல்வர் தனிநாயகம் அடிகள், தமிழ் விரிவுரையாளர் டாக்டர் எஸ். அரசரத்தினம், 'தமிழ்த் தினசரி' ஆசிரியரான முருகு சுப்பிரமணியம் ஆவர்.



நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது—அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்பநிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை.

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிருர்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது. உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகரடின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்'முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக் குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில் சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB

மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான பாக்கிங்

தமிழே இந்தியாவின் மூத்த தலைமொழி

முதல் அகராதியும் இலக்கியமும் தமிழில்தான் தோன்றின!

பிறநாட்டு நல்லறிஞர் சாற்றும் ஆய்வுரை

சென்னை, சன. 3—
உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்துள்ள பிறநாட்டு நல்லறிஞர்கள், செய்தியாளர்களிடம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :—

டாக்டர் கமில் சுவலபெல்

செக் நாட்டில் திராவிட—தமிழ் ஆராய்ச்சிப் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் கமில் சுவலபெல் கூறியதாவது :—

"தமிழ் மொழியின் வடிவமும் சுவையும் மிக மிக அற்புதமானது; வியக்கத்தக்கதாகும்.

"விந்தியத்திற்குத் தெற்கில் காணப்படும் கலை உணர்ச்சி—பண்பாடு—நாகரிகம் ஆகியவை பெருமிதம் கொள்ளும் அளவில் வளர்ந்துள்ளதைக் காண முடிகிறது.

"இந்திய நாட்டில் முதன் முதலில் தோன்றிய மொழி, தமிழ் மொழியாகத்தான் இருக்கவேண்டும். முதன் முதலில் தமிழ் அகராதியும், தமிழ் இலக்கியங்களும் தான் வெளிவந்திருக்க வேண்டும்."

டாக்டர் ஆர். இ. அஷர்

பிரிட்டனில்—எடின்பரோ பல்கலைக் கழகத்தில், பன்மொழிப் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் ஆர். இ. அஷர் கூறியதாவது :—

"எந்த இந்திய மொழிக்கும், உலகக் கருத்தரங்கு நடைபெற்றதில்லை; ஆனால், தமிழுக்குத்தான் இத்தகைய கருத்தரங்கு நடக்கிறது; இது, தமிழின் சிறப்பைக் குறிக்கிறது

"தமிழ், தனியாக வளர்ச்சி பெற்ற ஒரு மொழி; எந்த ஒரு மொழியிலிருந்தும் கடன் பெற்று அது வளரவில்லை!

"உலகில் தமிழ், ஒரு பழமையான மொழி; எல்லா மொழிகளையும்விட அது பழமையான மொழி; அது ஒரு தனிக் குடும்பமாக இருக்கிறது."

தனிநாயகம் அடிகள்

மலாசியா பல்கலைக் சழகத்தில் இந்தியப் படிப்புப் பேராசிரியராகப் பணியாற்றும் தனி நாயகம் அடிகள் கூறியதாவது :—

"கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் கருத்தரங்கிற்கும்—இங்கு நடைபெறும் கருத்தரங்கிற்கும் வேறுபாடு உண்டு; முதல் மாநாட்டில் 21 நாடுகளில் உள்ள 200 பிரதிநிதிகளே கலந்துகொண்டனர்; ஆனால் இந்தக் கருத்தரங்கில் 40 நாடுகளில் உள்ள 430 பிரதிநிதிகள் கலந்துகொள்வது ஒரு சிறப்பாகும்.

"இக்கருத்தரங்கில், ஆராய்ச்சியே சிறந்த நோக்கமாக உள்ளது; 'பிற நாடுகளில் தமிழாய்வு' என்பது பற்றி ஆராயப்படும்.

"சங்க காலத் தமிழ் இலக்கியங்கள், உலகிலேயே மிகமிக உன்னதமானவை; அவையனைத்தும் வளமான மொழியினைக் கொண்டவை; லத்தீன் மொழி பக்தி இலக்கியங்களைவிட, தமிழ் பக்தி இலக்கியங்கள் மிகவும் உயர்ந்தவை!"

தமிழ் வளர்த்த...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவர்கள் தலைமையில்—அருள் திரு. பிஷப் லெஸ்லி நியூபிகன் (வெள்ளைக்காரர்) திறந்துவைத்தார்; அயல் நாட்டினரான இவர், அழகு தமிழில் உரை நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, கால்டுவெல் உருவச் சிலையை, சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. எம். ஏ. மாணிக்க வேலர் அவர்கள் தலைமையில்—பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் திறந்துவைத்தார்.

ஜி. யு. போப், கால்டுவெல் ஆகிய இருவருடைய உருவச் சிலைகளையும் பொதுமக்கள் சார்பில் தென்னிந்தியத் திருச்சபை வழங்கியது.

அடுத்து, பாரதியார் உருவச் சிலையை நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கனார் அவர்கள் திறந்துவைத்தார்; இத்திறப்பு விழாவிற்கு சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் தலைமைவகித்தார்; இச்சிலையை வழங்கியது சென்னை மாநகராட்சிமன்றமாகும்.

அடுத்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருவச் சிலை, உள்ளாட்சித் துறையமைச்சர் திரு மா. முத்துசாமி தலைமையில்—பேராசிரியர் மு. வரதராசனார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது; இந்தச் சிலையையும் மாநகராட்சிமன்றமே வழங்கியது.

அடுத்து கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் திருஉருவச் சிலையை, தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள், உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் திறந்துவைத்தார்; இந்தச் சிலையையும் மாநகராட்சி மன்றமே வழங்கியது.

அடுத்து, வீரமாமுனிவர் உருவச் சிலை, சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் தலைமையில்—ஆர்ச் பிஷப் பேருள் திரு. அருளப்பா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது; இந்தச் சிலை, மயிலை ஆர்ச் பிஷப் அவர்களால் வழங்கப்பட்டது.

இறுதியாக கற்புக்கரசி கண்ணகியின் உருவச் சிலையை, பொதுப்பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்—திரு. ம. பொ. சிவ ஞானம் அவர்கள் திறந்துவைத்தார்; இந்தச் சிலையை, தமிழக ஆசிரியர்களும், மாணவர்களும் வழங்கியுள்ளனர்.

பின்னர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ. இராமகிருஷ்ணன் அவர்கள், சிலையை ஏற்று அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

விழா முடிந்ததும், விழாத் தலைவர்களும், உருவச் சிலைத் திறப்பாளர்களும், எல்லா உருவச் சிலைகளும் இருக்கும் இடங்களுக்குச் சென்று வணக்கம் செலுத்தி வந்தனர்.

வானொலியில் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள்

சென்னை, சன. 3—
உலகத் தமிழ் மாநாட்டின் பல்வேறு நிகழ்ச்சிகள் சென்னை வானொலி நிலைய ஒலிபரப்புக்களில் விரிவாக இடம்பெறும்.

மாநாட்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அலங்கார வண்டிகள் ஊர்வலம், பல்கலைக்கழகத்தின் நூற்றுண்டு விழா அரங்கில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கு, பூம்புகார் நகரில் (ஐலண்ட் மைதானம்) நடக்கும் விவாத நிகழ்ச்சிகள், கண்காட்சி துவக்க விழா முதலியவைபற்றிய நிகழ்ச்சிகளை சென்னை வானொலி நிலையம் ஒலிபரப்பும்.

இந்நிகழ்ச்சிகளை சன. 3-ம் நாள் இரவு 9-15 மணிமுதல் 10-30 மணி வரையில் கேட்கலாம்.

சன. 4-ம் நாளிலிருந்து 11-ம் நாள்வரை காலை 8-15 மணிமுதல் 9-15-வரையிலும் இரவு 9-15 மணி முதல் 10-30 மணிவரையிலும் மாநாடு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும்.

சன. 12-ம் நாள் காலை 8-15 மணிமுதல் 9-15 மணிவரை இந்நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும்.

விழா நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாவது பற்றிய விவரங்கள் நாள் தோறும் காலை 6-30 மணிக்கு, 'நிகழ்ச்சிக் குறிப்பு' அறிக்கையில் தெரிவிக்கப்படும்.

'இலட்சியங்கள் நிறைவேற உழைப்பேன்'

ஷேக் அப்துல்லா கூறுகிறார்

புதுடில்லி, சன. 2—
சுமார் இரண்டரை ஆண்டுக் காலம் காவலில் வைக்கப்பட்டிருந்த ஷேக் அப்துல்லா, விடுதலை செய்யப்பட்டார்; அவர்மீதிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டிருக்கின்றன.

அவர் இனி, இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் போகலாம்—எவரையும் சந்தித்துப் பேசலாம்.

"என்னுடைய இலட்சியங்களுக்காகத் தொடர்ந்து உழைக்கப்போகிறேன்; பாதை நீளமானதாகவும், சிரமமானதாகவும் இருக்கிறது"

என்று, விடுதலையான சில மணி நேரத்திற்குள், ஈத் பெருநாள் தொழுகையில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

குடியரசுத் தலைவருக்கு அண்ணா வரவேற்பு

அமைச்சர்கள் அனைவரும் அறிமுகம் செய்யப்பட்டனர்

சென்னை, சன. 3—
உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கி வைக்கவும், மற்றும் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், விமானம் மூலம் நேற்று மாலை சென்னை வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு உற்சாகமிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது. கவர்னர் உஜ்ஜல் சிங்கும், முதலமைச்சர் அண்ணாவும் அவருக்கு மாலையணிவித்தனர்.

கவர்னரும் முதலமைச்சரும் அவரை அழைத்து வந்து, தமிழக அமைச்சர்கள் அனைவரையும் அறிமுகம் செய்துவைத்தனர்.

சென்னை நகர மேயர் அபிபுல்லா பேக், சட்டமன்ற மேலவைத் தலைவர் மாணிக்கவேலர், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அனந்தநாராயணன், காங்கிரசுத் தலைவர் காமராசர், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், சென்னை நகர செரீப், 'சித்ரா' நாராயணசாமி, புதுவை முதலமைச்சர் பரூக் மரைக்காயர், என். வி. நடராசன், 'முரசொலி' மாறன் ஆகியோரும் குடியரசுத் தலைவருக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

கவர்னர் மாளிகையில் தங்கியிருந்தபின், டாக்டர் ஜாகீர் உசேன், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன் இல்லம் சென்று, அவருடன் சில நிமிட நேரங்கள் பேசிக்கொண்டிருந்தார்.

பின்னர் அவர், இராஜாஜி அவர்களின் இல்லம் சென்று உரையாற்றினர்.

'நம் நாடு'
உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பிதழ்
விலை 15 காசு

பூம்புகார் நகரில்..!

4—1—68-ம் நாள் நிகழ்ச்சிகள்

காலை 9 மணி : நாதசுர இசை—குழிக்கரை பிச்சையப்பா.

9-30 மணி : தமிழ் மாநாடு கொடியேற்று விழா—மேயர் அபிபுல்லா பேக்.

10 மணி : மாநாட்டு திறப்பு உரை—சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் பி. ஜி. கருத்திருமன்.
வரவேற்புரை : பவளவண்ணன் (துணை மேயர்)
தலைமையுரை : பேராசிரியர் க. அன்பழகன்.

10-30 மணி முதல் 1 மணிவரை : சொற்பொழிவுத் தொடர்—'தமிழக வரலாற்றில் சில திருப்பங்கள்'—பங்கு பெறுவோர் : டாக்டர் மு. வரதராசனார், மதுரை டாக்டர் மே. சுந்தரம், சுத்தானந்த பாரதி, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், கோவை புலவர் மருதவாணன், புலவர் அறிவுடைநம்பி.

பிற்பகல் 2-30 மணி : குறள் இசை—சந்திரசேகரன் குழுவினர்.

3 மணி முதல் 6 மணி வரை : சித்த வைத்திய மாநாடு—திறப்பாளர் : அமைச்சர் ஏ. கோவிந்தசாமி; தலைவர் : அமைச்சர் சாதிக் பாட்சா.

மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை : எம். எஸ். சுப்புலட்சுமி தமிழ் இசை

இரவு 9 மணி முதல் 9-45 மணி வரை : நடராஜ் சகுந்தலா குழுவினர் நடனம்.

10 மணி : நாடகம்—'துறவி' (அமைச்சர் கருணாநிதி எழுதியது) நடிப்பவர்கள் : தமிழக அரசுத் தலைமை செயலக அலுவலர்—தலைவர் : சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார்.

கிராமியக் கலை நிகழ்ச்சிகள்

4—1—68 வியாழக்கிழமை

பெங்களூர் சுந்தரமூர்த்தி குழுவினரின் பொய்க்கால் குதிரை ஆட்டம்—மாலை 6 மணிமுதல் 6-40 வரை.

சென்னை டி. என். கணேசன் குழுவினரின் பொய்க்கால் குதிரை ஆட்டம்—மாலை 6-40 முதல் இரவு 7-20 வரை.

காஞ்சிபுரம் சி. கே. ஏகாம்பரம், காளத்தி குழுவினரின் சிலம்பு நடனம்—இரவு 7-20 முதல் 8 வரை.

உலகத் தமிழ் மாநாடு--கருத்தரங்கு

[நூற்றுண்டு விழா மண்டபத்தில்]

பிற்பகல் 2 மணிமுதல் மாலை 5-10 மணி வரை தமிழறிஞர்கள், தனித்தனிக் குழுவினராகப் பிரிந்து தனித்தனி இடங்களிலே அவரவர்க்குரிய பொருள்கள் பற்றிய ஆராய்ச்சியும் விவாதமும் நடத்துவர். விவரம் :—

4—1—68 காலை 9-30 முதல் 12-45 வரை

தலைவர் : பேராசிரியர் எச்ஸ். எஸ். தனிநாயகம்; தலைவர்—இந்தியப் படிப்புத் துறை, மலாயா பல்கலைக்கழகம், கோலாலம்பூர்.

மாற்றுத் தலைவர் : டாக்டர் பி. ஜே சந்தேசரா, டைரக்டர்—கீழ்த் திசைக் கழகம், பரோடா.

குறிப்புரையாளர் : டாக்டர் எம். சண்முகம் பிள்ளை, தமிழ்த்துறை—மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

பேச்சாளர்கள் : 'தொல்பொருள் ஆராய்ச்சியும், தமிழ் இலக்கியமும்' என்பது பற்றி பிரெஞ்சு பேராசிரியர் பிலியோசா பேச்சு.

தமிழ்நாட்டு சரித்திரத்தின் முக்கிய கட்டடங்கள் பற்றி சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கே. கே. பிள்ளை பேச்சு.

தமிழகத்தின் வரலாறு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாமே தண்டனையளித்துக் கொண்டு உயிர்நீத்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். கண்ணகி வழக்குரைத்த காட்சியைத்தான் சிலையாக வடித்திருக்கிறோம்.

இந்தச் சிலையை அமைக்க பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து நிதி கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமாகும்; ஏனெனில், அன்றைய பாண்டியன் நெடுஞ்செழியன், நீதி தவறியதால் தேடிக்கொண்ட இழிவை—பழியை, இன்றைய கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் முன்னிலையில் ஆசிரியர்களும்—மாணவர்களும் நீக்கிவிட்டிருக்கின்றனர்!

'மாசறு பொன்னே -- வலம்புரி முத்தே' என்று வர்ணிக்கப்பட்ட கண்ணகியின் உருவத்தைத்தான் சிலையாக வடிக்க வேண்டும் என்று முதலிலே திட்டமிட்டோம்; ஆனால், வாழ்விலே பல வேதனைகளை அனுபவித்து -- இறுதியிலே கணவனையும் இழந்து வழக்குரைத்து நீதியை நிலைநாட்டிய நிகழ்ச்சியை நினைவுறுத்தும் காட்சிதான் மிகப் பொருத்தமானது' என முடிவு செய்து இந்தச் சிலையை உருவாக்கினோம்."

[ஏனையோர் உரை நாளை]

1,500 கைதிகள் விடுதலையாயினர்

தமிழ் மாநாட்டையொட்டி நடவடிக்கை

சென்னை, சன. 2—
உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தமிழக அரசு, சிறைக் கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைத்ததன் பயனாக மொத்தம் 1,500-க்கு மேற்பட்ட கைதிகள் விடுதலையாகியிருக்கின்றனர்.

தண்டனைக் காலம் குறைந்ததால் சென்னையில் 376 பேரும், சேலத்தில் 364 பேரும், திருச்சியில் 200 பேரும், வேலூரில் 438 பேரும், கோவையில் 400 பேரும் விடுதலையாயினர்.

சிறையிலிருந்தவாறே தமிழ்க் கவிதைகள் எழுதியனுப்பிய கைதிகள், மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு பரோலில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்; இவர்கள் 10 பேரும் மாநாடு முடிந்ததும் மீண்டும் அவரவர் இருந்து வந்த சிறைகட்குத் திரும்பிவிடுவர்.

வேலூரில் விடுதலையானர்களில் 75 பேர் பெண்கள் ஆவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை--13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.